සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

85 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2012 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2012 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2012

ගෘහ ආර්ථික විද්‍යාව I, II
மனைப் பொருளியல் I, II
Home Economics I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

## மனைப் பொருளியல் I

கவனிக்க :

(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
(ii) 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
(iii) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் எண்ணை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.
(iv) அவ்விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

1. கொழுப்புகளின் கட்டமைப்பில்,
   (1) காபனும் ஐதரசனும் மாத்திரம் அடங்கும்.
   (2) காபன், ஐதரசன், ஒட்சிசன் ஆகியன அடங்கும்.
   (3) காபன், ஐதரசன், ஒட்சிசன், நைதரசன் ஆகியன அடங்கும்.
   (4) காபன், ஐதரசன், ஒட்சிசன், நைதரசன், கந்தகம் ஆகியன அடங்கும்.

2. உடலில் மிக நன்றாக அகத்துறிஞ்சக்கூடிய வடிவில் (form) இரும்பு அடங்கும் ஓர் உணவுப் பொருள்
   (1) வல்லாரை (2) ஈரல் (3) போஞ்சி (4) கடலை

3. பளோரைட்டுக் குறைபாட்டின்போது
   (1) பற்கள் சிதைவடையும். (2) முரசு மென்மையடையும்.
   (3) முரசிலிருந்து குருதி வடியும். (4) பற்களில் கபிலநிறப் புள்ளிகள் (patches) தோன்றும்.

4. விற்றமின் A குறைபாட்டின் நோய் அறிகுறி.
   (1) என்புகள் பலவீனமுறலும் வளைந்து போதலும் (2) தோல் உலர்ந்து போதலும் சொரசொரப்பாதலும்
   (3) தலைமயிர் நிறமாற்றமடைதலும் உதிருதலும் (4) பசியின்மையும் வயிற்றுப்போக்கும்

5. பின்வருவன 'X' எனப்படும் விற்றமினின் சில இயல்புகள் ஆகும்.
   - உடலினுள் தொகுக்கப்படக்கூடியது.
   - என்புகள் பலமடைய உதவும்.
   - கொழுப்பில் கரையக்கூடியது.
   - கல்சியம் அகத்துறிஞ்சலுக்கு உதவும்.

   'X' எனப்படும் விற்றமின்
   (1) விற்றமின் A (2) விற்றமின் D (3) விற்றமின் E (4) விற்றமின் K

6. 100 கிராம் காபோவைதரேற்றும் 20 கிராம் புரதமும் 10 கிராம் கொழுப்பும் அடங்கும் உணவை உட்கொள்ளும் ஒருவரது உடல் பெறும் மொத்த சக்தியின் அளவு,
   (1) 570 கிலோ கலோரிகளாகும். (2) 620 கிலோ கலோரிகளாகும்.
   (3) 760 கிலோ கலோரிகளாகும். (4) 1020 கிலோ கலோரிகளாகும்.

7. தானிய வகைகளுக்கான மூன்று உதாரணங்கள்
   (1) குரக்கன், பருப்பு, அரிசி (2) கோதுமை, அரிசி, பருப்பு
   (3) அரிசி, கோதுமை, சோளம் (4) குரக்கன், சோயா, சோளம்

8. கோதுமை மாவில் அடங்கும் புரதம்,
   (1) கேசீன் எனப்படும். (2) அல்புமின் எனப்படும்.
   (3) மயோசீன் எனப்படும். (4) குளுற்றன் எனப்படும்.

9. பின்வரும் உணவுப் பொருள்களில் கூடிய சக்திப் பெறுமானமுடைய உணவுப் பொருள்
   (1) நிலக்கடலை (2) அரிசி (3) உருளைக்கிழங்கு (4) பருப்பு

10. இறைச்சி, மீன் ஆகியவற்றில் கூடுதலாக அடங்கும் போசணைப் பதார்த்தங்கள்,
   (1) புரதம், காபோவைதரேற்று, கல்சியம் ஆகியன. (2) கொழுப்புகள், புரதம், விற்றமின் C ஆகியன.
   (3) இரும்பு, கல்சியம், விற்றமின் C ஆகியன. (4) புரதம், கொழுப்புகள், விற்றமின் A ஆகியன.

[பக். 2 ஐப் பார்க்க

11. சிபார்சு செய்யப்பட்ட போசணை அளவுத்திட்டத்திற்கேற்ப (RDA) வயோதிப பருவத்தில் அதிகரிக்க வேண்டிய ஒரு போசணை
(1) கல்சியம் (2) விற்றமின் C (3) இரும்பு (4) விற்றமின் A

12. தானியங்களில் கூடுதலாக அடங்கும் காபோவைதரேற்று வகையொன்று
(1) பிரற்றோசு (2) அமைலோசு (3) மோல்றோசு (4) சுக்ரோசு

13. விசேட போசணைத் தேவையுள்ள ஒரு பருவம் **அல்லாதது**
(1) கர்ப்பிணிப் பருவம் (2) குழந்தைப் பருவம்
(3) வயதுவந்தோர் பருவம் (adult) (4) வயோதிபப் பருவம்

14. கடத்தல், உட்காவுகை ஆகிய வெப்ப ஊடுகடத்தும் முறைகளில் சமையல் செய்யப்படும் இரண்டு உணவு வகைகள் முறையே
(1) சூப், கட்லற் (2) உரொட்டி, சோறு (3) பான் கேக், வறை (4) இடியப்பம், பிட்டு

15. மரக்கறி சலாது தயாரிக்கும் மிகச் சிறந்த முறை,
(1) பரிமாறுவதற்கு சிறிது நேரத்திற்கு முன்னர் தயாரிப்பது
(2) தயாரித்து பின் மூடிவைத்தல்
(3) மரக்கறிகளை மிகச் சிறிதாக வெட்டிக் கொள்ளல்
(4) மரக்கறிகளைப் பெரிய துண்டுகளாக வெட்டிக் கொள்ளல்

16. நற்காப்பின்போது உணவின் pH பெறுமானத்தைக் குறைப்பதற்காகப் பயன்படுத்தும் ஒரு பொருள்.
(1) உப்பு (2) தேன் (3) சீனி (4) வினாகிரி

17. உணவு நற்காப்புப் பற்றி ஒரு மாணவன் எழுதிய குறிப்பில் பின்வரும் விடயங்கள் அடங்கியிருந்தன.
*A* - உருளைக்கிழங்கு தோசி தயாரிக்கும்போது அதிலுள்ள நீரின் அளவு கட்டுப்படுத்தப்படும்.
*B* - பாலின் பாச்சராக்கத்தின்போது எல்லா நுண்ணங்கிகளும் அழிக்கப்படுகின்றன.
*C* - எல்லா மரக்கறிகளையும் பழங்களையும் பதனிடுவதற்கு முன்பதாக கொதிநீரில் அமிழ்த்துதல் (blanching) வேண்டும்.
*D* - எலுமிச்சை ஊறுகாய் தயாரிக்கும்போது புறப்பிரசாரணம் நடைபெறும்.
இவற்றுள் சரியானது
(1) *A* யும் *B* யும் (2) *A* யும் *D* யும் (3) *B* யும் *C* யும் (4) *C* யும் *D* யும்

18. ஆண் இனப்பெருக்கத் தொகுதி தொடர்பாக மாணவர்கள் முன்வைத்த விடயங்கள் சில கீழே காட்டப்பட்டுள்ளன. இவற்றுள் சரியான கூற்று,
(1) அன்ட்ரஜினும் ஈஸ்ரஜினும் ஆண் இனப்பெருக்க ஓமோன்களாகும்.
(2) ஆண் இனப்பெருக்க ஓமோன்கள் கபச்சுரப்பி மூலம் சுரக்கப்படும்.
(3) விதைகள் மூலம் விந்துகள் உற்பத்தி செய்யப்படும்.
(4) முன்னிற்கும் சுரப்பியில் விந்துகள் சேமிக்கப்படுகின்றன.

19. பின்வரும் விடயங்களுள் பிரசவத்திற்கு முந்திய விருத்தியுடன் தொடர்புடைய சரியான கூற்று யாது ?
(1) ஒவ்வொரு மாதமும் சூலகத்திலிருந்து பல முதிர்ச்சி அடைந்த சூல்கள் வெளிவிடப்படும்.
(2) நுகம் ஒன்றில் 23 நிறமூர்த்தங்கள் அடங்கும்.
(3) பிரசவத்திற்கு முந்திய விருத்திப் பருவம் பொதுவாக 32 வாரங்களாகும்.
(4) கருப்பையின் சுவர் முளையத்திற்குப் போசணை வழங்கத் தயாராகும்.

20. 'கர்ப்பிணித் தாய் பிரசவத்திற்கு முன் பிணியாய் (pre natal clinic) நிலையத்திற்குச் சமுகம் அளித்தல் முக்கியமானதாகும்'. அதன் மூலம் பெறும் ஒரு சேவை,
(1) விற்றமின் A, விற்றமின் K ஆகியவற்றை வழங்கல்
(2) குருதியினத்தைச் சோதித்தல்
(3) சுயரோகத்தைத் தடுப்பதற்கு வக்சீன் வழங்கல்
(4) முதிர்மூலவுருவில் வளர்ச்சியைப் பரிசோதிக்க X கதிர்களுக்கு உட்படுத்துதல்

21. தாய்ப்பாலில் குறைந்த அளவில் உள்ள ஒரு போஷணை
(1) கொழுப்புகள் (2) விற்றமின் A (3) இரும்பு (4) றைபோபிளேவின்

22. பின்வருவன விளையாட்டுபகரணங்கள் சிலவற்றின் இயல்புகள் ஆகும்.
*A* - மிருதுவான உரோமங்கள் இருத்தல்
*B* - வர்ணம் பூசப்பட்ட மரத்தினால் ஆக்கப்பட்டிருத்தல்
*C* - பெரியதாகவும் பாரமற்றதாகவும் இருத்தல்
*D* - காற்றூதக்கூடியதாக இருத்தல்.
இவற்றுள் குழந்தைக்குப் பொருத்தமான விளையாட்டுப் பொருள்களின் இயல்புகளைக் காட்டுவது,
(1) *A, B* (2) *A, C* (3) *B, D* (4) *C, D*

[பக். 3 ஐப் பார்க்க

23. ஒரு (1 ஆண்டு) வயதை அண்மித்த குழந்தை வெளிக்காட்டும் இயல்பொன்று
   (1) தனியாக எழுந்து நிற்க முடிதல்
   (2) 20 பாற்பற்கள் வெளிப்படல்
   (3) எடை பிறப்பின் போதான எடையைப் போன்று இரண்டு மடங்காதல்
   (4) நுண் இயக்கத் தசைச் செயற்பாடுகளுக்குப் பழகுதல்

24. தேசிய நீர்ப்பீடன வேலைத்திட்டத்தின் மூலம் பிள்ளைகளில் தடுக்கப்படும் மூன்று நோய்கள்
   (1) கயரோகம், ஈர்ப்புவலி, நெருப்புக்காய்ச்சல்
   (2) போலியோ, ருபெல்லா, குக்கல்
   (3) சின்னமுத்து, பொக்குளிப்பான், தொண்டைக்கரப்பன்
   (4) வயிற்றுளைவு, சின்னமுத்து, போலியோ

25. பிள்ளை கோபாவேசத்தை வெளிப்படுத்தும் சந்தர்ப்பத்தின்போது வயதுவந்தோரால் எடுக்கக்கூடிய ஒரு நடவடிக்கை
   (1) ஏனைய பிள்ளைகளுடன் ஒப்பிட்டுப் பரிகாசம் செய்தல்
   (2) பிள்ளை கேட்பவற்றை வழங்குதல்
   (3) பிள்ளையின் கவனத்தை திசை திருப்புதல்
   (4) பிள்ளையை அச்சுறுத்தி தண்டனை வழங்கல்

26. "கட்டிளம் பருவத்தினர் சுயாதீனமாக இருக்க விரும்புவர்". பின்வரும் எக்கூற்று இதனை மிக நன்றாக வலியுறுத்துகின்றது ?
   (1) பல்வேறு நாகரிகங்களைப் பின்பற்ற விருப்பத்தைக் காட்டுவர்.
   (2) தமது கருத்துக்களுக்கு ஏற்ப செயற்படுவர்.
   (3) சகபாடிகளின் நட்பைப் பெரிதும் விரும்புவர்.
   (4) தகவல்களைத் தேடியறிய ஆர்வத்தைக் காட்டுவர்.

27. ஜனநாயக குடும்ப சூழலுடன் தொடர்புடைய ஒரு விடயம்
   (1) பிள்ளைகளின் கருத்துக்களை கவனத்திலெடுத்தல்
   (2) பிள்ளை சுதந்திரத்தை எதிர்பார்த்தல்
   (3) எல்லாச் செயற்பாடுகளின்போதும் பிள்ளைக்கு உதவுதல்
   (4) சமூகமயமாக்கலில் பிள்ளை பின்னடைவைக் காட்டுதல்

28. நீள் குறுந் தையல் எதன் ஒரு பேதமாகும் (variation) ?
   (1) சங்கிலித் தையலின்　　(2) அடைப்புத் தையலின்
   (3) நரம்புத் தையலின்　　(4) வெட்டுக்குத்துத் தையலின்

29. பின்வருவன தையல் முறையொன்றைப் பற்றி மாணவியால் எழுதப்பட்ட குறிப்புகள் ஆகும்.
   - அலங்காரங்களைச் செய்ய (அப்ளிக்) பயன்படும் ஒரு தையல் முறையாகும்.
   - தெறியோட்டைகளின் நேர் ஓரங்களைத் தைக்கப் பயன்படுத்துவர்.
   - குழந்தை ஆடைகளின் விளிம்புகளை அலங்கரிக்கப் பயன்படுத்துவர்.
   - பொருத்துகளில் தைக்காத விளிம்புகளை நேர்த்தியாக்கப் பயன்படுத்துவர்.

   இத்தையல் முறையாவது,
   (1) தெறியோட்டைத் தையல் (2) சங்கிலித் தையல் (3) கம்பளித் தையல் (4) விசுப்பத் தையல்

30. குழந்தை ஆடைகளில் இருக்க வேண்டிய இரண்டு இயல்புகள்
   (1) இளநிறத் துணியில் தைத்தல், சிறிய காட்டுருக்களுடன் தைத்தல் ஆகியன.
   (2) ஆடை தளர்வாக இருத்தல், அலங்கார அமைப்புகள் (trimmings) இருத்தல் ஆகியன.
   (3) ஆடைகள் அலங்காரமாக இருத்தல், ஆடை கடும்நிறத் துணியினால் தைக்கப்பட்டிருத்தல் ஆகியன.
   (4) ஆடை அலங்கார அமைப்புகள் இருத்தல், ஆடையை அணிய இலகுவாகவிருத்தல் ஆகியன.

31. பின்வருவன புடைவைகளையும் ஆடைகளையும் தைக்கும்போது பயன்படுத்தும் மூட்டொன்றைப் பற்றி எழுதப்பட்ட சில வாக்கியங்கள் ஆகும்.
   - இரண்டு துணித் துண்டினதும் பிழையான பக்கங்கள் முகத்துக்கு முகம் இருக்கக் கூடியவாறு வைத்துப் பொருத்துவர்.
   - தைக்கா விளிம்பைக் காணமுடியாது.
   - தழுவணை உறைகளைத் தைக்கும்போது பயன்படுத்துவர்.
   - குழந்தை ஆடைகளைத் தைக்கும்போது பயன்படுத்தப்படுவதில்லை.

   இம்மூட்டு
   (1) தட்டைப்பொருத்து　　(2) சாதாரண பொருத்து
   (3) மேற்செறி பொருத்து　　(4) பிரெஞ்சுப் பொருத்து

[பக். 4 ஐப் பார்க்க

15538

32. சன்சூட்டின் காலைச் சுற்றித் தைத்து பூர்த்தியாக்க மிகவும் பொருத்தமான முறை,
   (1) அதன் ஓரத்தை மடித்து விளிம்பைத் தைத்தல்
   (2) சரிவுக் கோட்டு நாடாவைப் பிடித்து மடித்துத் தைத்தல்
   (3) விளிம்பில் ரேந்தை ஒன்றைப் பிடித்துத் தைத்தல்
   (4) நேரான நாடாவொன்றைப் பிடித்துத் தைத்தல்


33. சன்சூட்டின் உடற்பாகம் அணையிடப்பட்டுள்ளது. நீள்பக்கமாக இரண்டாக மடித்த சரிவுக் கோட்டு நாடாவொன்றின் மடித்த விளிம்பை வெளியில் தெரியுமாறு உடற்பகுதிக்கும் உள்வைத்து தைக்கும் துணிக்கும் இடையில் வைத்துப் பிழையான பக்கமாகத் தைக்கப்பட்டிருந்தது. மேற்படி தைக்கும் நுட்ப முறையைக் குறிப்பிடுவது,
   (1) விளிம்பு மூடித் தைத்தல் என
   (2) முகப்புத் துண்டு தைத்தல் என
   (3) அலங்கார நுண்ணாடா தைத்தல் என
   (4) உருவாக்க முகப்புத் துண்டு இடுதல் என

34. துணியை முன்னாயத்தம் செய்தலுடன் தொடர்புடையது **அல்லாதது**,
   (1) கழுவுதல் (2) கஞ்சிபோடுதல் (3) தொங்க வைத்தல் (4) அழுத்துதல்

35. ஆடையைத் தைப்பதுடன் தொடர்பான குறிப்பிலிருந்து பிரித்தெடுத்த சில வாக்கியங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
   *A* - அடிப்படை மாதிரியுரு அமைக்கும்போது கபிலநிறத் தாளின் மினுக்கமான பக்கத்தை உபயோகிக்க வேண்டும்.
   *B* - குழந்தை ஆடைகளைத் தைக்கும்போது பொருத்துக்கள் குறைவாக இருத்தல் வேண்டும்.
   *C* - பிள்ளைகளின் ஆடைகளில் தோள் நாடாக்களை இணைப்பதற்கு கிடையான தெறியோட்டைகள் பயன்படுத்தப்படும்.
   *D* - சரிவுக் கோட்டு நாடாக்களைப் பொருத்தும்போது பொருத்துக்கள் ஒரே திசையில் இருத்தல் வேண்டும்.
   இவற்றுள் சரியான கூற்றுகள்
   (1) *A, B* (2) *A, C* (3) *B, D* (4) *C, D*

36. வீடொன்றின் பௌதிக ஒழுங்கமைப்பில் அத்தியாவசியமாக இருக்கவேண்டிய மூன்று பகுதிகள்
   (1) சாப்பாட்டறை, வரவேற்பறை, படுக்கை அறை (சயன அறை)
   (2) வரவேற்பறை, விறாந்தை, சமையலறை
   (3) வரவேற்பறை, படுக்கை அறை, சமையலறை
   (4) களஞ்சிய அறை, சாப்பட்டறை, வரவேற்பறை

37. பின்வரும் வரிப்படம் ஓர் அறையின் தளத் திட்டமாகும்.




The National e-learning Portal for The General Education

   இதில் *A, B, C* இனால் காட்டப்படுவன முறையே
   (1) சுவர் அலுமாரி, கதவு, யன்னல்
   (2) கதவு, யன்னல், சுவர் அலுமாரி
   (3) சுவர் அலுமாரி, யன்னல், கதவு
   (4) யன்னல், சுவர் அலுமாரி, கதவு

38. மனித வளம், பௌதிக வளம் என்பன முறையே
   (1) இடவசதி, திறன்கள்
   (2) மனப்பாங்கு, பணம்
   (3) மின்சாரம், சொத்துகள்
   (4) சமூக வசதிகள், அறிவு

39. மட்டுப்படுத்தப்பட்ட இடவசதியுடன் கூடிய வீடொன்றைத் திட்டமிடும்போதும் ஒழுங்கமைக்கும்போது செய்யக் **கூடாத** செயல்
   (1) வரவேற்பறை இருக்கைத் தொகுதியுடன் சாய்விருக்கையை வைத்தல்
   (2) படிவரிசையின் கீழ் புத்தக அலுமாரி ஒன்றை அமைத்தல்
   (3) படுக்கை அறையில் தட்டுக்கட்டில்களை வைத்தல்
   (4) அறைகளில் சுவர் அலுமாரிகளைப் பொருத்துதல்

40. பின்வருவன குடும்பம் பணத்தைக் கையாளும்போது பின்பற்ற வேண்டிய சில படிமுறைகளாகும்.
   *A* - தினமும் தாயாரிடமிருந்து பணம் வாங்குதல
   *B* - தேவைக்கேற்ப தினமும் வாங்குதல்
   *C* - பணத் தேவைக்கேற்ப பட்டியற்படுத்தல்
   *D* - குடும்ப வரவு, செலவு பற்றிய தேடியறிதல்
   இவற்றுள் சரியான முறைகள்
   (1) *A, B* ஆகியன (2) *A, C* ஆகியன (3) *B, C* ஆகியன (4) *C, D* ஆகியன

※ ※

[பக். 5 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

85 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2012 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2012 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2012

ගෘහ ආර්ථික විද්‍යාව I, II
மனைப் பொருளியல் I, II
Home Economics I, II

## மனைப் பொருளியல் II

முக்கியம் :
**முதலாம்** வினாவையும் எவையேனும் **நான்கு** வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

**1.** பின்வரும் சம்பவத்தைக் கற்று கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகள் எழுதுக.

கட்டிளமைப் பருவ மகளொன்றும் பின்பிள்ளைப் பருவ மகளொன்றும் முன்பிள்ளைப் பருவ மகனொன்றும் உள்ள குடும்பத்தின் தந்தை சொந்த வியாபாரத்தில் ஈடுபடுகின்றார். தாயார் முன்பிள்ளை அபிவிருத்தி நிலையமொன்றை நடத்துபவராவார். அவர்களது இரண்டு மாடி வீட்டின் தரைத் தளமும் தோட்டமும் முன்பிள்ளை அபிவிருத்தி நிலையத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இரண்டு படுக்கை அறைகளுடன் கூடிய மேல் மாடியில் அவர்கள் வாழ்கின்றனர்.

(i) வாரநாட்களில் காலை நேரம் வேலை மிகுந்த நேரமாகும். நேரத்தை முகாமைத்துவம் செய்து கொள்ளுவதற்காக இக்குடும்பத்தினால் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(ii) பிள்ளைகளின் படுக்கை அறைக்குப் பொருத்தமான பல்தொழிற்பாட்டுத் தளபாடங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(iii) முன்பிள்ளை அபிவிருத்தி நிலையத்தினால் மு.ப. 10 மணிக்கு பிள்ளைகளுக்கு வழங்கும் உணவு வேளைக்குப் பொருத்தமான உணவுப் பட்டியல் ஒன்றைத் தயாரிக்குக.

(iv) இவ் உணவு வேளையைப் பிள்ளைகளுக்கு வழங்கும் முறையொன்றை வரிப்படக் குறிப்பொன்றின் துணையுடன் குறிப்பிடுக.

(v) கட்டிளம்பருவ மகளுக்கு வழங்கக்கூடிய விசேட போசணைத் தேவைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(vi) தரமான உணவை உட்கொள்ள ஆர்வமுள்ள இக்குடும்பம் மீன் வாங்கும்போது கவனம் செலுத்த வேண்டிய **நான்கு** விடயங்களைக் குறிப்பிடுக.

(vii) மேற்படி முன்பிள்ளை அபிவிருத்தி நிலையப் பிள்ளைகளின் அறிவு வளர்ச்சிக்காகப் பயன்படுத்தும் உபகரணங்கள் **இரண்டைப்** பெயரிடுக.

(viii) முன்பிள்ளைப் பருவப் பிள்ளைகளின் மனவெழுச்சி வளர்ச்சிக்காக குறித்த ஆசிரியர் எடுக்க வேண்டிய படிமுறைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(ix) முன்பிள்ளை அபிவிருத்தி நிலையப் பிள்ளைகளின் சீருடையில் இருக்க வேண்டிய **நான்கு** அம்சங்களை எழுதுக.

(x) முன்பிள்ளை அபிவிருத்தி நிலையத்தை அலங்கரிப்பதற்காக துணையணியை நிருமாணிக்கும் பொறுப்பு உங்களிடம் வழங்கப்பட்டுள்ளது. அதற்காக உபயோகிக்கக்கூடிய புடைவைகள், உடை (clothing & textiles) நிருமாணிப்புக்கள் தொடர்பாக நீங்கள் பெற்ற தேர்ச்சிகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

**2.** (i) குழந்தை ஆடைகளுக்கு பருத்தித் துணி மிகச் சிறந்தது. இதனை நியாயப்படுத்த **மூன்று** விடயங்களைக் குறிப்பிடுக.

(ii) உடைகளை நிருமாணிக்கும்போது பின்பற்ற வேண்டிய படிமுறைகளை ஒழுங்கு முறையில் தருக.

(iii) சோம் தையலைப் பயன்படுத்தி, உடையொன்றின் விளிம்பு மடிப்பை தைத்து பூர்த்தியாக்கும் முறையை விவரிக்க.

[பக். 6 ஐப் பார்க்க

3. மூன்று உணவு வகைகளும் அவற்றைத் தயாரிக்கும்போது பின்பற்ற வேண்டிய சில படிமுறைகளும் கீழே தரப்பட்டுள்ளன.

* மீன் பாண் (fish bun) - மாவுக் கலவையுடன் ஈஸ்ட் (மதுவம்) கலத்தல்.
* கஸ்ரட் புடிங் - முட்டை சேர்த்தல்
* நாரன் பணியாரம் - பாணி சேர்த்த தேங்காயை உருண்டைகளாக்கி மாக்கரைசலில் தோய்த்துப் பொரித்தல்.

மேற்படி செயற்பாடுகள் குறித்த உணவு வகைகளின் நேர்த்தியில் செல்வாக்குச் செலுத்தும் விதத்தை விளக்குக.

4. (i) பாலூட்டும் தாயொருவருக்குப் பொருத்தமான மதிய உணவு வேளையொன்றுக்கான உணவுப் பட்டியலொன்றைத் திட்டமிடுக.

(ii) (a) உணவுப் பொருளொன்றை உதாரணமாகக் கொண்டு வீட்டில் அதனை நற்காப்புச் செய்யும் முறையொன்றைக் குறிப்பிடுக.

(b) இம்முறைக்கேற்ப உணவை நற்காப்புச் செய்யும்போது பின்பற்றும் படிமுறைகளைக் குறிப்பிடுக.

(iii) நுகரும் உணவு வகைகளின் தரத்தைப் பேணப் பொருத்தமான படிமுறைகள் முக்கியமானவை. இதனைக் கருத்திற்கொண்டு, பின்வரும் சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றிலும் மேற்கொள்ள வேண்டிய **இரண்டு** படிமுறைகளை விவரிக்க.

(a) உணவைக் களஞ்சியப்படுத்தும்போது

(b) உணவு சமைக்கும்போது

5. (i) (a) 'குடும்பம்' என்பதை அறிமுகஞ் செய்க.

(b) கருக்குடும்பம், விரிகுடும்பம் ஆகியவற்றுக்கிடையிலான **இரண்டு** வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

(ii) (a) குடும்பத்திலுள்ள பின்வரும் வளங்கள் பாகுபாட்டின்படி எவ்வகையைச் சேர்ந்தவையாகும் ?

* உழைப்பு
* நீர்
* நேரம்

(b) நீரைச் சரியான முறையில் முகாமைத்துவம் செய்யும்போது வலியுறுத்த வேண்டிய **மூன்று** விடயங்களை விளக்குக.

(iii) வீட்டிற்கு வழங்கப்படுகின்ற ஒளியும், காற்றோட்டமும் அங்கு வசிப்பவர்களது சௌகரியத்துக்கு முக்கியமானவையாகும். இயற்கை ஒளியையும் காற்றோட்டத்தையும் பெறுவதற்காக வீடுகளைத் திட்டமிடும்போது பயன்படுத்தும் உபாயங்கள் **இரண்டு** வீதம் குறிப்பிடுக. அவ் உபாயங்களைப் பயன்படுத்தும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்களை ஆராய்க.

6. (i) கர்ப்பிணித் தாயார் ஒருவர் பின்பற்ற வேண்டிய சுகாதாரப் பழக்கங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக.

(ii) குழந்தைக்கு மேலதிக உணவை வழங்கும்போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் **மூன்றைக்** குறிப்பிட்டு, அவை ஒவ்வொன்றுக்கும் காரணங்களைத் தருக.

(iii) முன்பிள்ளைப் பருவப் பிள்ளைகளின் மொழி விருத்திக்காக வீட்டில் எடுக்கக்கூடிய நடைமுறைகளை விளக்குக.

7. (i) 'கட்டிளமைப் பருவம்' என்பதை அறிமுகஞ் செய்க.

(ii) முன் பிரசவப் பருவத்தினுள் நடைபெறும் 'உட்பதித்தல்' என்பதை விளக்குக.

(iii) கட்டிளமைப் பருவத்திற்கு சிறப்பாயமைந்த இயல்புகள் கட்டிளைஞரின் சமூக வளர்ச்சியின் மீது செல்வாக்குச் செலுத்தும். அத்தகைய இயல்புகள் **இரண்டை** உதாரணமாகக் கொண்டு ஆராய்க.

* * *